**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.20/2024 - PW-17**

| | |
|---|---|
| Name | திரு. கோகுல்ராஜன் |
| Husband/Father Name | பெருமாள் |
| Village /Area | திருவண்ணாமலை |
| Taluk | திருவண்ணாமலை |
| Occupation | மதுவிலக்கு பிரிவு ஆய்வாளர் |
| Age | 59 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 12.01.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்ட மதுவிலக்கு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது 11.04.2018 அன்று இரவு 22.30 மணிக்கு ஸ்ரீதர், த/பெ.அண்ணாமலை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் மீது அரக்கோணம் நகர காவல் நிலைய குற்ற எண். 222/2018 சட்ட பிரிவு 302 இ.த.ச படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசாஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்று இரவு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ஸ்ரீதர், அருள்குமார், ரகுநாத், சுதா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்பு 12.04.2018 அன்று காலை 06.00 மணிக்கு சாட்சிகள் மதன், ஜெய்பூபாலன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அதசாஆ.13** மற்றும் **அதசாஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் இரத்தம் தோய்ந்த சிமெண்ட் தரை மற்றும் இரத்தம் தோயாத சிமெண்ட் தரை மற்றும் இரத்தம் தோய்ந்த தலையணை ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அதசாஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்ட சான்று

பொருட்கள் ஏற்கனவே சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்பு அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சென்று சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்துதாரர் முன்னிலையில் காலை 07.00 முதல் 08.30 மணி வரை பிரேத விசாரணை செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அதசாஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை செய்ய சென்ற தலைமை காவலர் எண் 1619 ஜெயபிரகாஷ் என்பவர் மூலம் விண்ணப்பம் கொடுத்த பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன். பின்பு பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தின் மீதிருந்த இரத்தக்கறை படிந்த உடைகளை ஆஜர் செய்ததனை தனிஅறிக்கை மூலம் பெற்றேன். சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஸ்ரீதர், அருள்குமார், ரகுநாத், சந்தோஷ்குமார், ஏழுமலை, துர்காராணி, லோகேஷ், தாமோதரன், முகமது யுனிஷ், பார்வை மகஜர் சாட்சிகளான மதன், ஜெயபூபாலன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கின் எதிரி பெருமூச்சு கிராம நிர்வாக அலுவலர் திரு.குமரவேல் என்பவரிடம் சரணடைந்து அவரிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலததை பெற்று எதிரியுடன் மாலை 16.15 மணிக்கு நிலையத்தில் ஒப்படைத்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசாஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எதிரியை 16.15 மணிக்கு கைது செய்து 16.30 முதல் 17.30 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் பெற்று ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரி வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த 4 அடி 2 அங்குலம் உள்ள இரும்பு பைப் ஒன்று அதன் எடை சுமார் 1 கிலோ 80 கிராம் இருக்கும். சாட்சிகள், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஜனமே ஜெயம் என்பவர் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அதசாஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த இரும்பு பைப் **சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி சம்பவத்தின் போது அணிந்திருந்த இரத்தக்கறை படிந்த ஜீன்ஸ் பேண்ட் மற்றும் இரத்தக்கறை படிந்த ரோஸ் வெள்ளை சிறு கோடுப்போட்ட முழுக்கைச்சட்டை ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அதசாஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த இரத்தக்கறை படிந்த ஜீன்ஸ் பேண்ட் மற்றும் இரத்தக்கறை படிந்த ரோஸ் வெள்ளை சிறு கோடுப்போட்ட முழுக்கைச்சட்டை ஆகியவை சான்று பொருட்கள் முறையே **சா.பொ.6** மற்றும் **சா.பொ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது

கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம்-95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த படிவம்-95 **அதசாஆ.20** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. அன்றையே தினமே எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். நான் பணிமாறுதல் ஆகிய காரணத்தால் வழக்கு கோப்பை எனக்கு அடுத்து வந்த ஆய்வாளர் திரு.முத்துராமலிங்கத்திடம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.01.12 16:12:39 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.